## செய்தி வெளியீடு

நாள் : 21.08.2019

**மாநில அளவிலான ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்களுக்கான ஆய்வுக்கூட்டத்தில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தமிழகத்தில் உள்ள அனைத்து ஊரக வளர்ச்சித்துறை அலுவலகங்கள் மற்றும் கட்டிடங்களில் ஒருமாத காலத்திற்குள் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்.**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தலைமையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் மாநில அளவில் ஊராட்சி பகுதிகளில் நடைபெற்று வரும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் மற்றும் வளர்ச்சிப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் 19.08.2019 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி அம்மா மாளிகை கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமிழகத்தில் உள்ள அனைத்து பஞ்சாயத்து அலுவலகங்கள், ஒன்றிய அலுவலகங்கள் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை சார்ந்த கட்டிடங்களில் ஒருமாத காலத்திற்குள் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை அமைக்கப்பட வேண்டும் என அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். இப்பணிகள் முடிவுற்ற பின்னர் அதுகுறித்த விவரங்களை தகுந்த எண்ணிக்கையுடன் தலைமையிடத்திற்கு தெரியப்படுத்த வேண்டும் எனவும், இப்பணிகளை அனைத்து மாவட்டங்களிலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடியாக சென்று ஆய்வு செய்ய உள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அனைத்து ஊரக உள்ளாட்சி பகுதிகளில் உள்ள உள்ளாட்சி அமைப்பு கட்டிடங்கள் உட்பட அனைத்து அரசு கட்டிடங்கள், வணிக வளாகங்கள், அனைத்து தொழிற்சாலை கட்டிடங்கள், பெரும் வணிக நிறுவனங்கள், அடுக்குமாடி குடியிருப்புகள், பள்ளிகள், கல்லூரிகள் உள்ளிட்ட அனைத்துக் கல்வி நிறுவனங்கள், தனிக் குடியிருப்புகள், பண்ணை வீடுகள், மருத்துவமனைகள், திருமண மண்டபங்கள், திரையரங்குகள், கார்ப்பரேட் நிறுவனங்கள், தங்கும் விடுதிகள், உணவகங்கள் உள்ளிட்ட அனைத்து கட்டடங்களிலும், மேலும், சாலை ஓரங்களிலும், பொதுவிடங்களிலும், மழைக்காலத்தில் தண்ணீர் தேங்கும் இடங்களைக் கண்டறிந்து மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை விரைந்து ஏற்படுத்திட வேண்டும் என அறிவுறுத்தினார்கள்.

மேலும், நீர்நிலைகள் மற்றும் குளங்களை சுற்றியுள்ள கட்டடங்களில் சேகரிக்கப்படும் மழைநீர், நேரடியாக இந்நீர் நிலைகளில் சென்று சேர்க்கப்பட வேண்டும் எனவும், மனைகளின் பரப்பளவிற்கு ஏற்ப மழைநீர் கட்டமைப்புகள் மற்றும் மழைநீர் சேகரிப்பு தொட்டிகள் ஏற்படுத்திட வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்கள்.

மேலும், ஊரக வளர்ச்சித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் 70,368 நீர் நிலைகளான சிறுபாசன ஏரிகள், குளங்கள் மற்றும் குட்டைகள் உள்ளன. இவற்றை முறையாக பராமரித்து அவற்றிலும்

மழைநீர் சேகரிக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் 2011 முதல் 2015 வரையிலான 5 ஆண்டுகளில் ரூ.2,200 கோடி மதிப்பீட்டில் தூர்வாரப்பட்டுள்ள 50,767 சிறுபாசன ஏரிகள், குளங்கள், குட்டைகள் மற்றும் 2016–17 முதல் 2017–18 வரையிலான 2 ஆண்டுகளில் ரூ.877 கோடி மதிப்பீட்டில் தூர் வாரப்பட்டுள்ள 16,508 சிறுபாசன ஏரிகள், குளங்கள் மற்றும் குட்டைகள் நல்ல நிலையில் தொடர்ந்து பராமரிக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தினார்.

தாய் II திட்டத்தின் கீழ் (2016–17) ரூ.226 கோடி மதிப்பீட்டில் ஊராட்சி ஒன்றியங்களில் முட்புதர்களை அகற்றி, இயந்திரங்கள் மூலம் தூர்வாரி, கரைகள் பலப்படுத்தப்பட்டுள்ள 1,201 சிறுபாசன ஏரிகளின் தற்போதைய நிலை குறித்தும் விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

கடந்த 2 ஆண்டுகளில், 22,347 தடுப்பணைகள் ரூ.485 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இந்த தடுப்பணைகளில் தற்போது பெய்த மழையினால் நல்ல பயன் தந்துள்ளது என தெரிவித்தார்.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 10.07.2019 அன்று சட்டப்பேரவையில் விதி–110ன் கீழ் அறிவித்ததற்கிணங்க,** கிராமப்புறங்களில் தண்ணீரை சேமித்து பாசனத்திற்கு பயன்படுத்திடவும், நிலத்தடி நீர் மட்டத்தினை உயர்த்திடவும், தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் உள்ள வாய்க்கால்கள், ஓடைகள் மற்றும் கால்வாய்களின் குறுக்கே மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணியாளர்களைக் கொண்டு ரூ.312 கோடி மதிப்பீட்டில் துவங்கப்பட்டுள்ள 10,000 தடுப்பணைகள் கட்டும் பணிகளை விரைந்து முடிக்கவும்,

மேலும், மாநில நிதியின் மூலம், ரூ.500 கோடி மதிப்பீட்டில் 5000 சிறுபாசன ஏரிகள், 25,000 குளங்கள், குட்டைகள் ஆகியவற்றில் துவங்கப்பட்டுள்ள தூர்வாரும் பணிகள் மற்றும் கரைகளை பலப்படுத்தும் பணிகளையும், அவற்றிலுள்ள மதகுகள், கலங்குகளை ரூ.750 கோடி மதிப்பீட்டில் MGNREGS திட்டத்தின் கீழ் சீரமைக்கும் பணிகளையும், செப்டம்பர் மாத இறுதிக்குள் முடிக்கப்பட வேண்டும் என மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில் ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் திரு.க.பாஸ்கரன், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சித்துறை கூடுதல் இயக்குநர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர்கள், ஊரக வளர்ச்சித் துறை செயற்பொறியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : ஊரக வளர்ச்சித்துறை**